


# ஹெச்.ஐ.வி மருந்துகளுக்கு உடலில் எதிர்ப்பு சக்தி உண்டாவதை பரிசோதித்தல்.

## எதிர்ப்பு சக்தி என்றால் என்ன?

ஹெச்.ஐ.வி பெருகாமல் இருப்பதற்கு கொடுக்கப்படும் மருந்துகள் வேலை செய்யாமல் இருந்தால் அம்மருந்துகளுக்கு உடலில் எதிர்ப்பு சக்தி உண்டாயிருக்கிறதென்று பொருள். ஒரு மருந்திற்கு உடலில் எதிர்ப்பு சக்தி உண்டானால, அம்மருந்தினை உட்கொள்ளுகையில் ஹெச்.ஐ.வி வேகமாக பரவும். ஹெச்.ஐ.வி பெருகும்போது, அதனுள் மாற்றங்கள் உண்டாகி வேறுவிதமாக மாறக்கூடும். இப்படி மாறுகையில், மருந்துகளுக்கு அவை எதிர்கொண்டு செயல்படும். முன்னமிருந்த ஹெச்.ஐ.வி வகை மருந்தினால் குணமாக்கப்பட்டாலும், இந்த வகை ஹெச்.ஐ.வி மருந்துகளுக்கு எதிராக செயல்படும். காலம் செல்லச் செல்ல மாறுபட்ட ஹெச்.ஐ.வி யானது முக்கிய வகையாக மாறி மருந்துகள் கொடுத்தால் கூட வேகமாக பரவும்.

ஹெச்.ஐ.வி மருந்துகளுக்கு எதிர்ப்பு சக்தி எப்போது உண்டாகிறது:

- ஏற்கெனவே எதிர்ப்பு சக்தி கொண்ட ஹெச்.ஐ.வி கிருமியால் ஒருவர் பாதிக்கப்பட்டால்
- மருந்துகளை ஒருவர் ஒழுங்காக உட்கொள்ளாமல் இருந்தால் ஹெச்.ஐ.வி வேகமாக பெருகுவதை தடுக்க உடலினால் முடியாது. எவ்வளவு பெருகுகிறதோ அவ்வளவு வகைகளாக ஹெச்.ஐ.சி மாறக்கூடும். இதில் சில வகையான ஹெச்.ஐ.விக்கள் மருந்திற்கு எதிராக செயல்படும்.

## ஹெச்.ஐ.வி மருந்துகளுக்கு உடலில் எதிர்ப்பு சக்தி உண்டாகுதலை பரிசோதித்தல் என்றால் என்ன?

இந்த பசிசோதனை மூலமாக நீங்கள் எடுத்துக்கொள்ளும் மருந்துக்கு எதிர்ப்பு உண்டாகிறதா இல்லையா என கண்டுபிடிக்க முடியும். ரத்த பரிசோதனை மூலமாக எடுக்கப்படும் ஹெச்.ஐ.வி யை வைத்து இந்த பரிசோதனை செய்யப்படும்.
இரண்டு வழிகளில் இந்த எதிர்ப்பை அளவிட முடியும்: **ஜீனோடைபிக் பரிசோதனை** மற்றும் **பீனோடைபிக் பரிசோதனை**.



ASAAP
ALLIANCE FOR SOUTH ASIAN AIDS PREVENTION
www.asaap.ca
CATIE
Canadian AIDS Treatment Information Exchange
Réseau canadien d'info-traitements sida
www.catie.ca

# ஹெச்.ஐ.வி மருந்துகளுக்கு உடலில் எதிர்ப்பு சக்தி உண்டாவதை பரிசோதித்தல்.



## இந்த பரிசோதனைகள் எதனை அளக்கும்?

ஜீனோடைபிக் பரிசோதனை எதிர்ப்பை பரிசோதிக்க ஒரு மாற்று வழியாகும். ஒரு குறிப்பிட்ட வகை ஹெச்.ஐ.வியை இந்த பரிசோதனை தேடுகிறது. கண்டுபிடிக்கப்பட்ட ஒவ்வொரு வகைக்கும் ஒரு குறியீட்டு எண் கொடுக்கப்படும். (உதாரணமாக K103N), ஒவ்வொரு வகையும் எந்த மருந்திற்கு குணப்படும் என ஏற்கெனவே ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறது. அதனால் இப்போது கண்டுபிடிக்கப்படும் வகைக்கு மருந்து எதிர்ப்பு சக்தி இருக்கிறதா என கணிக்க முடியும்.

பீனோடைபிக் பரிசோதனை நேரடியானது. கிருமி பெருகுதலை தடுக்க எவ்வளவு மருந்து தேவைப்படுகிறது என இது கணிக்கும். ஒரு கிருமி மருந்திற்கு எதிராக செயல்பட்டால், அம்மருந்தினையே அதிகமாக கொடுக்க வேண்டியிருக்கும். பரிசோதனையின் முடிவுகள் எண்ணிக்கையாக வெளியிடப்படும். உதாரணமாக 15 என்றால் 15 முறை இந்த கிருமி பெருகி வளர்கிறதென்றோ அல்லது கொடுக்கப்படும் மருந்தினை இன்னும் 15 முறை பெருக்கி கொடுக்க வேண்டும் என்றோ பொருள். இது 15 முறை எதிர்ப்பு எனப்படும்.

வர்ச்சுவல் பீனோடைப் பரிசோதனை என்ற மூன்றாவது வகையான பரிசோதனையும் உண்டு. இது மற்ற இரண்டின் விடைகளையும் ஒன்றாக சேர்த்து எடுக்கப்படும் முடிவாகும் . முதலாவதாக ஜீனோடைப் பரிசோதனை செய்யப்படுகிறது. இதன் முடுவுகள் பீனோடைப் பரிசோதனையின் முடிவுகளோடு ஒப்பிட்டு பார்க்கப்படும். இப்படி ஒப்பிட்டு பார்த்த பின்னர், கிருமி எப்படி செயல்படுகிறதென்று கண்டுபிடிக்கப்படும்.

## ஹெச்.ஐ.வி மருந்துகளுக்கு எதிர்ப்புண்டாவதை பரிசோதிப்பது எப்போது நடத்தப்பட வேண்டும்?

பொதுவாக ஹெச்.ஐ.வி குணப்படுத்த மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட திட்டமிடும்போது இந்த பரிசோதனைகள் செய்யப்படும். பொதுவாக ஒரு ml க்கு 1000 கிருமிகள் என்ற நிலையில் இது ஏறெடுக்கப்படும்.

தங்களுக்கு மருந்தினை எதிர்க்கும் ஹெச்.ஐ.வி. உள்ளதா என கணிக்கவும் இந்த பரிசோதனை உதவும். அதற்கேற்ப அவர்கள் வேறு மருந்துகளை பயன்படுத்தலாம்.

## பரிசோதனையில் பிரச்சனைகள் என்ன?

இந்த பரிசோதனையில் பல பிரச்சனைகள் உள்ளன:

- சில இடங்களில் இந்த பரிசோதனை இல்லை.
- இவைகளை செய்ய அதிக செலவாகும்.
- முடிவுகளை பெற உங்களுக்கு 2 முதல் 3 மாதங்கள் வரை ஆகலாம்.
- முடிவுகள் தெளிவாக இருக்காது அல்லது புரியும்படி இருக்காது.
- உங்கள் ரத்தத்தில் இருக்கும் கிருமிகளின் எண்ணிக்கை ஒரு ml க்கு 1000 வரை இல்லையென்றால் பரிசோதனை சரியாக செய்ய முடியாது.
- அமெரிக்கா, மேற்கு ஐரோப்பா, ஆஸ்திரேலியா அல்லது வேறு நாடுகளில் இப்பரிசோதனை வேலை செய்யாமல் போகலாம்.

# ஹெச்.ஐ.வி மருந்துகளுக்கு உடலில் எதிர்ப்பு சக்தி உண்டாவதை பரிசோதித்தல்.

இந்த பரிசோதனை எல்லா முடிவுகளை தெரிவிக்காவிட்டாலும், இது உதவியாகவே இருக்கும். மருந்து எதிர்ப்பினால் மட்டும் மருந்துகள் வேலை செய்யாமல் இருக்காது என்பதை மனதில் வைத்து கொள்ளுங்கள். சரியாக மருந்து உட்கொள்ளாமை, மருந்து உடலில் ஒட்டாமல் இருத்தல், மருந்துகளுக்குள் செயல்பாடு ஆகியவைகளும் இதற்கு காரணமாக இருக்கலாம். குணப்படுத்தும் முறையை மாற்ற முற்படும்போது, சம்மந்தப்பட்டவரின் பரிசோதனை முடிவுகளையும், அவரின் முழு ஆரோக்கியத்தையும், அவர் எடுத்துக்கொண்ட மருந்துகளை பற்றிய தகவல்களையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

## இந்த மருந்து எதிர்ப்பினை நான் எப்படி தடுக்க முடியும்?

மருத்துவரின் ஆலோசனைப்படி சரியான மருந்துகளை சரியாக உட்கொண்டு ஹெச்.ஐ.வி யை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதே மருந்து எதிர்ப்பினை தடுக்க சிறந்த வழி. இது சிகிச்சை பற்றுதல் எனப்படும். ஹெச்.ஐ.வி சிறிதளவே பெருகினால், சிறிதளவே அதன் வகைகள் இருக்கும். இதனால் மருந்து எதிர்ப்பு உண்டாகாமல் இருக்கும்.



ஹெச்ஐவி சம்பந்தப்பட்ட நோய்கள் மற்றும் சம்பந்தப்பட்ட சிகிச்சைகள் பற்றி முழு தகவல் தெரிந்த பயிற்சி பெற்ற மருத்துவரின் ஆலோசனையின் பேரில் மட்டுமே குறிப்பிட்ட மருத்துவ சிகிச்சைகள் பற்றி முடிவெடுக்க வேண்டும்.

தங்களை கவனித்து கொள்பவர்களுடன் சேர்ந்து, உடல் நிலையை தாமே பராமரிக்க விரும்பும் ஹெச்ஐவி/எய்ட்ஸ் நோய் உள்ளவர்களுக்கு தகவல் மற்றும் உதவியை கனடாவின் ஏய்ட்ஸ் சிகிச்சை தகவல் பரிமாற்றம் (CATIE) மற்றும் தெற்காசிய ஏய்ட்ஸ் தடுப்பு நிலையம் (ASAAP) நல்லெண்ணத்துடன் வழங்குகிறது. CATIE(கேட்டி) அல்லது ASAAP (ஏஸாப்) அளிக்கும் அல்லது பிரசுரிக்கும் தகவல்களை பெறுபவர்கள் இதை மருத்துவ ஆலோசனையாக கருதக்கூடாது. குறிப்பிட்ட சிகிச்சைகளை நாங்கள் பின்பற்றவோ, பரிந்துரைப்பதோ இல்லை, பல்வேறு விரிவான தகவல்களை கலந்தாலோசிக்கவே நாங்கள் வலியிறுத்துகிறோம். மருத்துவம் சம்பந்தப்பட்ட எந்த ஒரு முடிவையோ, நடவடிக்கையையோ எடுக்குமுன் பயிற்சி பெற்ற மருத்துவரை கலந்து ஆலோசிக்குமாறு வலுவாக வலியிறுத்துகிறோம்.

CATIE அல்லது ASAAP அளிக்கும் அல்லது பிரசுரிக்கும் தகவல்கள் முழுமையானவை அல்லது முற்றிலும் சரியானவை என்பதற்கு நாங்கள் எந்த உத்தரவாதமும் அளிப்பதில்லை. இந்த தகவல்களின் அடிப்படையில் செயல்படுபவர்கள் தங்கள் சொந்த பொறுப்பில் செயல்படலாம். இத்தகைய தகவல்களிலிருந்து பெறும் பயன் அல்லது அவபயன்களால் ஏற்படக்கூடிய எந்த ஒரு சேதத்திற்கும் CATIE அல்லது ASAAP அல்லது கனடாவின் பொது சுகாதார ஏஜென்சியோ, அதன் ஊழியர்களோ, இயக்குநர்களோ, அதிகாரிகளோ, அல்லது தொண்டர்களோ, பொறுப்பாக மாட்டார்கள். CATIE அல்லது ASAAP மூலமாக கிடைக்கும் அல்லது பிரசுரிக்கப்படும் கட்டுரையின் கருத்துக்கள் முற்றிலும். ஏழுத்தாளரின் கருத்துக்கள் ஆகும், இது CATIE அல்லது ASAAP யின் கொள்ளகைகளையோ கருத்துக்ளையோ பிரதிபலிப்பதில்லை. கனடாவின் எந்த ஒரு பொது சுகாதார ஏஜென்சியின் கருத்துக்களையும் இது பிரதிபலிப்பதில்லை.

Copyright: This Fact Sheet is made available through a collaboration between Alliance for South Asian AIDS Prevention (ASAAP), Asian Community AIDS Services (ACAS) and the Canadian AIDS Treatment Information Exchange (CATIE). Original content developed by ACAS, 2001. Translation into Punjabi and Tamil by ASAAP, 2006.

This information is also available in Chinese, Tagalog and Vietnamese www.acas.org
Funding has been provided by the Public Health Agency of Canada
Supported by an unrestricted educational grant from GlaxoSmithKline in partnership with Shire BioChem